31st August 1961]

Financial Aid to T.B. Patients

*1566 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காச நோயாளிகளுக்காக சர்க்கார் உதவிப் பணம் தருகிறார்களா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes, Sir.

(இ) copy[a] of the orders issued in the matter is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : இந்த அறிக்கையில் எவ்வளவு பணம் தரப்படுகிறது என்று சொல்லப்படவில்லை. இந்த பவனகர் பண்டிலிருந்து கொடுக்கப்படும் பணம் எவ்வளவு அதிகபட்சம், எவ்வளவு குறைந்தபட்சம் கொடுக்கப்படும் என்று அறியமுடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த நிதியிலிருந்து 4 ஆயிரம் ரூபாய் வட்டிவருகிறது. இதைத்தான் வினியோகிக்கிறோம். இது இல்லாமல் இப்போது டிஸ்கிரிஷனரி கிராண்ட் 50 ஆயிரம் ரூபாய் இதற்கு ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதிலிருந்து கொடுக்கிறோம். மருத்துவ இலாக்கா தலைவரிடம் அப்ளிகேஷன் அனுப்பினால் அந்தந்த அப்ளிகன்ட் நிலையையும் அந்தஸ்தையும் அனுசரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

Assignment of House-sites for Homeless Poor

*1567 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூக்கா, பழனிச்செட்டி பட்டியில் உள்ள வீடில்லாத ஏழைகளுக்கு இடம் ஜாரி செய்யக் கோரும் மனு 1958-ம் ஆண்டு ஜூலை மாதம் 12உ ஜில்லா கலெக்டரிடம் கொடுத்ததின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Collector of Madurai has reported that no such petition was received in his office.

Unemployed Agriculturists

*1568 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், துரிஞ்சாபுரம் சமுதாய நலத் திட்டப் பகுதியில் வேலையற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை தரும் மாதிரித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) அப்படியாயின், அதன் விவரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir.

(இ) A paper on the Pilot Scheme for the utilisation of idle manpower in rural areas was placed on the Table of the House on 30th March 1961 in reply to Legislative Assembly Question No. 1210 (1361) (Starred) by Sri N. K. Palaniswami, M.L.A.

---

[a] Printed as Appendix V on pages 535–537 infra,

[31st August 1961

SRI S. M. ANNAMALAI : அப்படி வேலை செய்பவர்களில் ஆண்களுக்கு எவ்வளவு கூலி, பெண்களுக்கு எவ்வளவு கூலி தரப்படுகிறது. அந்த கூலி போதுமா ? மேலும் பல இடங்களில் இம்மாதிரி திட்டம் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒருவருக்கு 6 அணு கூலியும் மத்தியான சாப்பாடும் போடுகிறார்கள். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேறு வேலை கொடுப்பதற்காகத்தான் இந்தத் திட்டம் ஏற்படுத்தப்படுகிறது. சில இடங்களில் சாப்பாடு இல்லாமல் 12 அணு கொடுக்கப்படுகிறது. அதிகமான பேர்கள் இந்த வேலைக்கு வர முன்வரவில்லை. இதனால் என்ன தெரிகிற தென்றால் 12 அணுவிற்குமேல் கூலி கிடைக்கும் வேறு வேலை கிடைப்பதனால் தான் அவர்கள் அந்த இடங்களுக்கு வரவில்லை என்று. இதனால் வேலை யில்லாதவர்கள் அதிகமாக இல்லை என்று தெரிகிறது.

SRI S. M. ANNAMALAI : அதிகமான பேர்கள் வேலைக்கு வரவில்லை என்றால் அவர்களுக்குக் கொடுக்கும் கூலி மிகமிகக் குறைவாக இருக்கிறது. இப்போது 6 அணுதான் கூலி கொடுக்கிறார்கள். இதை இன்னும் 10 அணு என்று செய்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால் வருஷத்திலே மூன்று மாதங்கள்தான் இந்தத் திட்டத்தின்கீழ் வேலை கிடைக்கிறது. இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் 10 அணு கூலி அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். 12 அணுதான் அவர்களுக்குக் கூலி. சாப்பாடு போட்டால் 6 அணு கூலி கொடுக்கப்படும். ஆகையால் கனம் அங்கத்தினர் சொன்னதைவிட இரண்டு அணு அதிகமாகக் கொடுக்கிறோம்.

SRI P. V. SHANMUGAM : இந்தத் திட்டம் துரிஞ்சிபுரத்தில் மாத்திரம் அமுலாக்கப்பட்டதா ? மற்ற இடங்களிலும் அமுலுக்கு வந்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ரொம்பவும் பிற்போக்காக இருக்கும் ஜில்லாக்களிலேதான் அமுலாக்கப்படுகிறது. இம்மாதிரியான பகுதிகள் வேறு ஜில்லாக்களில் இருந்தால் அங்கே அமுலாக்கப்படும்.

SRI R. KRISHNASWAMY NAIDU : ராமநாதபுரத்தில் இருக்கும் ஸ்ரீவல்லிபுத்தூர் பிளாக்கில் இந்தத் திட்டம் நடைபெறுகிறது. அங்கு 10, 12 ஊர்களுக்கு ரோட்டுகள் போடப்பட்டன. மேலும் போடவேண்டிய அவசியம் இருக்கிறது. இன்னும் அதிகமான வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு அந்த பிளாக்கில் இந்தத் திட்டத்தின்கீழ் நடத்துவதற்கு கவனம் செலுத்து வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது முன்னோடி திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த திட்டம் வெற்றிபெற்றால் வேறு இடங் களில் விஸ்தரிக்கப்படும்.

SRIMATHI HEMALATHA DEVI : வேலையற்ற விவசாயிகளுக்கு வேலை தரும்படியான திட்டம் 10 இடங்களில் ஏற்படுத்தப்பட்டன என்று சொல்லப் பட்டன. அது எந்தெந்த இடங்களில் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM :

North Arcot	Thirunjipuram
South Arcot	Gingee
Chingleput	Kadambathur
Coimbatore	Avinashi
Madurai	Batlagadur
Ramanathapuram	Srivilliputhur
Salem	Krishnagiri

31st August 1961]

Thanjavur	.. .. ..	Pattukottai
Thirichi	.. .. ..	Thottiam
Thirunelveli	.. .. ..	Kuruvikulam

முதலிய இடங்களில் துவங்கப்பட்டிருக்கிறது.

SRI R. SRINIVASA IYER : ஆறு அணு கொடுத்து சாப்பாடும் போடுகிறார்கள், சாப்பாடு இல்லையென்றால் 12 அணு கூலி கொடுத்து ஆள் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். ஆனால் 50 பேர் வைத்து வேலை செய்யக்கூடிய பட்டுக்கோட்டை பிளாக்கிலே 150 பேர் வந்து அந்த 50 பேர்களுக்குக் கொடுக்கக்கூடிய கூலியிலே வேலை செய்வதற்குத் தயாராய் இருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: பட்டுக்கோட்டை பிளாக் கொஞ்சம் அலாதியாக இருக்கிறது. இதுமாதிரி அவர்கள் வருவது தஞ்சாவூரில் வேலை செய்யும் மனிதர்களின் தாராள மனப்பான்மையைக் காட்டுகிறது.

SRI S. M. ANNAMALAI ; நான் கேள்வி கட்கும்போது 10 அணு கூலி கொடுக்கவேண்டுமென்று சொன்னேன். 10 அணு கூலி கொடுத்து சாப்பாடும் போட்டுதான் என்று சொன்னேன். அதற்குக் காரணம் என்ன வென்றால் வருஷத்திலே மூன்று மாதம்தான் அங்கே வேலை இருப்பதால் சர்க்கார இந்தக் கூலியை உயர்த்துவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஸ்ரீ சினிவாச அய்யர் கேள்வி கேட்கும்போது சொன்னார்கள் 50 பேர்கள் வேலை செய்து வாங்கக்கூடிய கூலியை 150 பேர்கள் வேலை செய்து வாங்கிக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் இருப்பவர்கள் இந்த வேலைகளுக்கு வரத் தயாராய் இருக்கும்போது மற்ற இடங்களில் வேலைக்கு வரவில்லையென்றால் அவர்கள் சோம்பேறிகளாகத்தான் இருக்க வேண்டும்.

SRI T. S. RAMASWAMI : பத்து இடங்களில் இந்தத் திட்டம் அமுலில் இருப்பதாகச்சொன்னார்கள். கன்யாகுமரி ஜில்லாவிலும் இந்தத் தட்டம் ஆரம்பிக்கப்படுமா

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த பைலட் ப்ராஜட் மிகவும் பிற்போக்கான இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இது வெற்றிகரமாக நடந்தால், இதனால் எற்படும் பலனைப்பார்த்து மற்ற இடங்களில் எடுத்துக்கொள்ளப்படும்.

Madras Corporation (Extension of limits)

* 1569 *Q*.—SRI N. R. THIAGARAJAN ; கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தாம்பரம் வரை சென்னை கார்ப்பரேஷனுடன் சேர்க்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : No, Sir.

SRI K. VINAYAGAM : Were any representations made by the Panchayat Boards of Pallavaram and Tambaram for their inclusion within the City limits?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : There is no proposal pending with the Government. There was a proposal from them only to make them into municipalities.

SRI A. GOVINDASAMI : தாம்பரம் முனிசிபாலிடி ஆகவேண்டும் என்று ஒரு கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்ததா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON ; அந்த கோரிக்கை வந்திருக்கிறது. அந்த அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.